# தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்கு எந்நாளும் உழைக்கும்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர்

# நம் முதல்வருக்கு என்றும் துணை நிற்போம்!

## சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை,ஜூன்.28-

**சட்டப் பேரவையில், நேற்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை உள்ளிட்ட தமது துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றியபோது, “தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்கு எந்நாளும் உழைக்கும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர் நம் முதல்வருக்கு என்றும் துணை நிற்போம்!” என்று சூளுரைத்தார்.**

**சட்டப் பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பதிலுரை வருமாறு:**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள்மீது பதிலுரையாற்ற வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், இன்றைக்கு, முதல்வர் அவர்கள், திருச்சிராப்பள்ளி மாநகரில், உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்ற ஒரு நல்ல அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கும் இந்த நேரத்தில் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தங்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கக்கூடிய அவை முன்னவர் அவர்களுக்கும், அரசு தலைமை கொறடா அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும், அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விளையாட்டு என்று எடுத்துக்கொண்டால், ஒரு சிலருடைய பெயர்கள் வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும். ஓட்டப் பந்தயம் என்று சொன்னால், உசைன் போல்ட்; கிரிக்கெட் என்று சொன்னால், மகேந்திர சிங் தோனி. ஒலிம்பிக் மற்றும் கிரிக்கெட் போட்டிகளில் இவர்கள் இருவரும் வெற்றிகளையும், பதக்கங்களையும் அடுக்கடுக்காகக் குவித்தவர்கள். ஒவ்வொரு போட்டியிலும் இவர்களுடைய சாதனைகளை இவர்களே முறியடித்துக்கொள்வார்கள்.

### அரசியல் களத்தில் வெற்றிகளைக் குவிக்கும் முதல்வர்!

அதேபோல, அரசியல் களத்தில் நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) களம் காணும் ஒவ்வொரு தேர்தலிலும், தன்னுடைய முந்தைய சாதனையை, வெற்றியை விஞ்சுகிற அளவுக்கு தற்போது வெற்றிகளைக் குவித்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நமது திராவிட முன்னேற்றக் கழக அணி, நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் களத்தில் சிறப்பாக விளையாடி, உழைத்து, 40-க்கு 40 பதக்கங்களையும் வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) சாம்பியன்ஷிப் பட்டத்தையும் வென்றிருக்கிறது. இந்த மகத்தான வெற்றியை பரிசளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)




## தொகுதிகளில் தலா ஒரு மினி ஸ்டேடியம்!

இதற்கெல்லாம் காரணம், தி.மு.க. என்னும் இந்த திராவிட அணியின் தலைவர் நமது முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நூற்றாண்டு நிறைவைக் கண்டிருக்கும் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தான் களம்கண்ட அனைத்துத் தேர்தல்களிலிலும் வெற்றியை மட்டுமே பெற்ற பெருமைக்குரியவர். அவருடைய கொள்கை வாரிசாக திகழ்கிற நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தான் தலைமையேற்ற பிறகு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நமது கழகத்தை வெற்றிபெற வைத்துக் கொண்டிருப்பவர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்குக் காரணம், நமது முதலமைச்சர்மீது நாங்கள் எந்தளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறோமோ, அதே அளவிற்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் அவர்மீது தளராத நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியார் அவர்கள் போற்றிய சமூக நீதி, பேரறிஞர் அண்ணா அவர்களால் சூட்டப்பட்ட தமிழ்நாடு எனும் பெயர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட தமிழுணர்வு இவை அனைத்தும் என்றென்றும் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை நமது முதலமைச்சர் அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தகைய பெருமைக்குரிய முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, எப்படி இந்தியாவிலேயே நம்பர் 1 அரசாக திகழ்கிறதோ, அதேபோல நம்முடைய முதலமைச்சர் அவர்களால் வழிநடத்தப்படும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறையும், இன்றைக்கு நம்பர் 1 இடத்தை நோக்கி பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள்!

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

2021 ஆம் ஆண்டு கழக அரசு அமைந்தது முதல், தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 2 ஆயிரத்து 860 வீரர்களுக்கும், மாற்றுத்திறனாளி வீரர்களுக்கும் இதுவரை 102 கோடியே 72 இலட்சம் ரூபாய், நம்முடைய முதலமைச்சர் அவர்களால் உயரிய ஊக்கத் தொகையாக (High cash incentives) வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மற்ற வீரர்களுக்கு இணையாக, தேசிய அளவில் வெற்றிபெறுகிற மாற்றுத் திறனாளி வீரர்களுக்கும் கடந்த ஆண்டு முதல் உயரிய ஊக்கத் தொகை (High cash incentives) வழங்கப்பட்டு வருகிறது.

‘கேலோ இந்தியா’ விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டு வீரர்களுக்கு, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், போட்டிகள் நிறைவுபெற்ற ஒரே வாரத்தில் உயரிய ஊக்கத் தொகையை வழங்கி, கௌரவித்திருக்கிறோம். இதன் மூலம், அடுத்தடுத்தப் போட்டிகளில் பதக்கங்களை வென்று காட்டுவதற்கான ஊக்கத்தை நம் வீரர்கள் பெற்றுள்ளனர்.

கடந்த முறை ஒலிம்பிக் மற்றும் பாரா-ஒலிம்பிக் போட்டிகளுக்கு தகுதிபெற்ற நம்முடைய விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் 5 இலட்சத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கடந்த ஒலிம்பிக் போட்டியின் போது, தமிழ்நாட்டிலிருந்து 12 வீரர்கள் கலந்துகொண்டார்கள். இந்த முறை, அதாவது, இந்த ஆண்டில் நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிக்கு தகுதிபெற்றுள்ள வீரர்களுக்கு ரூபாய் 5 இலட்சமாக இருந்த ஊக்கத் தொகையை ரூபாய் 7 லட்சமாக உயர்த்தி வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய தேதி வரை 16 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். விளையாட்டுத் துறையில், ஏழையெளிய பின்புலத்திலிருந்து வருகின்ற திறமையாளர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே முதன்முறையாக தொடங்கிய திட்டம் தான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைத் திட்டம்.

விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள வீரர்கள், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், விளையாட்டு உபகரணங்களை வாங்கவும் நிதி உதவித் தேவைப்பட்டால், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் www.tnchampions.sdat.in எனும் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். சம்பந்தப்பட்ட வீரரின் விண்ணப்பம் ஆய்வு செய்யப்பட்டு, மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் அவருக்கான நிதி உதவி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து வழங்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கி வைத்தது மட்டுமல்ல, தன்னுடைய சொந்த நிதியிலிருந்து முதல் நிதியாக ரூபாய் 5 லட்சத்தை அந்த அறக்கட்டளைக்கு வழங்கி பெருமைப்படுத்தினார்கள்.

நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள், தங்களுக்கு அறிமுகமான விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி தேவை என்றால், அவர்களை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் விண்ணப்பிக்கக் கோரி அறிவுறுத்தலாம். அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கப்பட்ட ஒரே வருடத்தில், 375 விளையாட்டு வீரர்களுக்கு, இதுவரை 8 கோடியே 62 லட்சம் ரூபாய் நிதியுதவியாகவும், ஊக்கத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

அதில், இதுவரை தேசிய மற்றும் சர்வதேச அளவிலானப் போட்டிகளில், 21 தங்கம் உள்பட 62 பதக்கங்களைப் வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

உதாரணமாக, கோவையில் எளியதொரு குடும்ப பின்னணியைக் கொண்ட Cycling வீராங்கனை சகோதரி தமிழரசிக்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைமூலம் ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில், அதிநவீன சைக்கிள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்ட நிலையில், அவர் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு 2 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்று நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தார் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

> “இந்த ஆண்டில் நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிக்கு தகுதிபெற்றுள்ள வீரர்களுக்கு ரூபாய் 5 இலட்சமாக இருந்த ஊக்கத் தொகையை ரூபாய் 7 லட்சமாக உயர்த்தி வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.”

### கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்!

“முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்” அவர்களின் நூற்றாண்டு விழாவைப் போற்றுகின்ற வகையிலும், விளையாட்டு என்பது நகரங்களில் மட்டுமே தேங்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தோடும், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்- Dr Kalaignar Sports Kits வழங்கும் திட்டம், ரூபாய் 86 கோடி செலவில் அனைத்து ஊராட்சிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்திருந்தோம்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 33 விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட இந்த Kits-ஐ, இதுவரை, மதுரை, கோவை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 2 ஆயிரத்து 72 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கியுள்ளோம். மீதமுள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், Kalaignar Sports Kits விரைவில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் முதல்முறையாக கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் கடந்தாண்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டன. கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக செய்து முடிக்கப்பட்டன.

சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் 12 நாட்கள் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் இந்தியா முழுவதும் இருந்து 5 ஆயிரத்து 630 வீரர்கள் கலந்து கொண்டார்கள். ஒன்றியப் பிரதமரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இந்த விளையாட்டுத் துவக்கப் போட்டியில் கலந்துகொண்டு பாராட்டினார்கள். இவ்வளவு சிறப்பான ஒரு கேலோ இந்தியா விளையாட்டு நிகழ்ச்சியை நான் எங்குமே பார்த்ததில்லை என்று ஒன்றியப் பிரதமர் குறிப்பிட்டுப் பாராட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தக் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியை நடத்த ஒன்றிய அரசு சென்ற வருடம் மத்தியப் பிரதேச மாநிலத்திற்குக் கொடுத்த நிதி ரூபாய் 25 கோடி. இந்தமுறை தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு கொடுத்த நிதி வெறும் 10 கோடி.

### கேலோ இந்தியா போட்டி தமிழ்நாடு 2-வது இடம்!

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில், நம்முடைய தமிழ்நாட்டு வீரர்கள், 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என மொத்தம் 98 பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தனர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கேலோ இந்தியா பதக்கப் பட்டியலில், தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வந்தது இதுவே முதல்முறை என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை சென்றாண்டு வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். 15 பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில், 3 லட்சத்து 76 ஆயிரம் வீரர்கள் பங்கேற்றனர். இந்த ஆண்டும் அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் கலந்து கொள்ள அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கூடுதல் விளையாட்டுகள் சேர்க்கப்பட வேண்டும் என்ற நம்முடைய பல சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அதனடிப்படையில், புதிய விளையாட்டுகள் இந்தாண்டு சேர்க்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியா மட்டுமல்ல, ஒட்டுமொத்த ஆசிய கண்டமுமே உற்று நோக்குகின்ற வகையில், 7 ஆவது ஆசிய ஆண்கள் சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கிப் போட்டியை சென்னையில் கடந்த ஆண்டு நடத்தினோம். 16 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நடைபெற்ற இந்தப் போட்டிக்காக தமிழ்நாடு அரசு 17 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது.

### ஹாக்கி வீரர்களுக்கு ஊக்கத் தொகை!

ஹாக்கி விளையாட்டில் தலைசிறந்த 6 ஆசிய நாடுகள் பங்கேற்ற இப்போட்டியில், இந்திய ஹாக்கி அணி சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசியக் கோப்பையை வென்ற நம் இந்திய ஹாக்கி அணியைப் பாராட்டும் வகையில், அன்றே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்திய ஹாக்கி அணி வீரர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாயும், பயிற்சியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாயை ஊக்கத் தொகையாக அன்றே அறிவித்து வழங்கினார்கள்.

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ் 2023 என்ற உலகத்தரம் வாய்ந்த சதுரங்கப் போட்டியை நம்முடைய கழக அரசு 2 கோடி ரூபாய் செலவில் நடத்தியது. இப்போட்டியில் வெற்றி பெற்றதன்மூலம், தமிழ்நாடு செஸ் வீரர் தம்பி குகேஷ் அவர்கள், கனடாவில் நடைபெற்ற FIDE Candidates போட்டியில் பங்கேற்பதற்கான தகுதியைப் பெற்றார். தம்பி குகேஷ், தற்போது FIDE World Chess Championship-லும் பங்கேற்கவுள்ளார். உலகிலேயே மிக இளம் வயதில் FIDE World Chess Championship-ல் பங்கேற்கவுள்ள தம்பி குகேஷ், தமிழ்நாடு அரசின் ELITE திட்ட வீரர் என்பதையும் இந்த மாமன்றத்தில் பெருமையுடன் பதிவு செய்துகொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கித் தர வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்கள் தனது தலையாய கடமையாகக் கருதுகிறார்கள். எனவே, மாநில - தேசிய - சர்வதேச அளவிலான போட்டிகளில் சாதிக்கின்ற வீரர்களுக்கு அரசுத் துறை மற்றும் அரசுப் பொதுத் துறை நிறுவனங்களில் 3 சதவீதம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சென்ற ஆண்டில் மட்டும், 7 விளையாட்டு வீரர்கள் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டனர்.

நம்முடைய விளையாட்டு அரங்கங்கள் சர்வதேசத் தரத்தில் அமைய வேண்டும் என்ற நோக்கில், உலகின் முதல் பாலிகிராஸ் பாரிஸ் ஜிடி (Poligras Paris GT) ஹாக்கி செயற்கை புல்தரை ஒலிம்பிக் தரத்தில் சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் ரூபாய் 10 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023-ஐ நடத்துவதற்காக சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் ரூபாய் 8 கோடியே 64 இலட்சம் செலவில் ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமன்றி, தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 355 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளன.

விளையாட்டு கட்டமைப்புகளைப் பரவலாக்கம் செய்கின்ற வகையில், விளையாட்டு அரங்கங்கள் இல்லாத சட்டமன்றத் தொகுதிகளில் தலா ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தோம். முதற்கட்டமாக, 9 சட்டமன்றத் தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கும் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அவை அனைத்தும் விரைவில் மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், அவர்களுடைய தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கப்படுமா என்று வெட்டுத் தீர்மானங்கள்மூலம் கேள்வி எழுப்பியுள்ளார்கள். அதற்கான பதிலை இங்கே அளிக்க விரும்புகின்றேன். மினி ஸ்டேடியம் அமைக்கப்படாத சட்டமன்றத் தொகுதிகளில், மினி ஸ்டேடியம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்று ஆய்வு செய்து அரசின் அனுமதியைப் பெற்று அதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மேற்கு தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள் அவர்கள் அவருடைய தொகுதியிலுள்ள அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் multi-purpose sports stadium அமைக்கும் பணிகள் இன்னும் தொடங்கவில்லை என்று கூறியிருந்தார்கள். அவருக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் விளக்கத்தை அளிக்க விரும்புகின்றேன். 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் multi-purpose sports stadium அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அடுத்த மாதத்திற்குள் ஸ்டேடியம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு வீரர்கள் நிறைந்த மணிப்பூர் மாநிலத்தில் சென்ற ஆண்டு உங்களுக்குத் தெரியும் கலவரங்கள் நடைபெற்றபோது, அங்கிருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள், பயிற்சி பெற முடியாத சூழல் இருந்தது. இதனை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அங்குள்ள விளையாட்டு வீரர்களை மணிப்பூர் விளையாட்டு வீரர்களை தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பேரில், முதலமைச்சர் அவர்களுடைய அழைப்பின் பேரில் சுமார் 20 மணிப்பூர் விளையாட்டு வீரர்கள், தமிழ்நாட்டுக்கு வந்து வாள்வீச்சு மற்றும் குத்துச்சண்டைப் போட்டிகளுக்காக 30 நாட்கள் சென்னையில் தங்கி பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்கான விமானப் பயணக் கட்டணம், தங்குமிடம், உணவு உள்ளிட்ட அனைத்துச் செலவினங்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமே, தமிழ்நாடு அரசே ஏற்றது.

திராவிட மாடல் என்றால் என்னவென்று சிலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பெயர் தான் திராவிட மாடல் என்பதை எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற அந்த மணிப்பூர் வீரர்களில் இரண்டு பேர், கேலோ இந்தியா இளையோர் போட்டியில் 2 பதக்கங்களைக் வென்றனர் என்பதை இந்த மாமன்றத்தின் வழியே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)




### கோவையில் பன்னாட்டு கிரிக்கெட் ஸ்டேடியம்!

சென்னைக்கு அடுத்தபடியாக, கோவையில் பன்னாட்டு கிரிக்கெட் ஸ்டேடியம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை நம் முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ளார்கள். நம் முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, அந்த மைதானத்தை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணியை இரண்டு வாரங்கள்

தொடர்ச்சி 6- ஆம் பக்கம்